இல்லை. இக்காரணங்களுக்காக ஒத்திவைக்கக் கூடாது என்று சட்டப் பேரவை விதிமுறைகள் பொதுவாக எடுத்துக் கூறியிருப்பதனாலும், முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற உறுதி மொழி விளக்கத்தையொட்டியும், இதைப் பற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவை இல்லை என்று நான் கருதுகிற காரணத்தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: உண்ணாவிரதம், வேலை நிறுத்தத்திற்காக மட்டுமல்ல இந்த ஒத்திவைப்புப் பிரச்னை, நடுவர் தீர்ப்பை அரசு மீறியது பற்றியும்தான்.

(3) அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண். 2) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 9/70) சட்ட மேலவையில் 30–3–1970 அன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதும் செய்யப்படவில்லை என்று சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர்
3. மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர்
4. மாண்புமிகு நிதி அமைச்சர்
5. திரு. து. ப. அழகமுத்து
6. திரு. பி.ஜி. கருத்திருமன்
7. திரு. கே. விநயகம்
8. திரு. கரு. சீமைச்சாமி
9. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்
10. திரு. கோ. பூவராகன்
11. திரு. பி. கே. மூக்கையா தேவர்
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து